## 116. என் சொந்தம் நீங்கதான்

### பல்லவி

என் சொந்தம் நீங்கதான்
என் பந்தம் நீங்கதான்
என் சொத்து நீங்கதான்
என் சுகமும் நீங்கதான்

### சரணங்கள்

1. என் பாசமும் நேசமும் நீங்கதான்
என் வாஞ்சையும் ஏக்கமும் நீங்கதான்
என் திட்டமும் தீர்மானம் நீங்கதான்
நீங்க தானாப்பா
\- என் சொந்தம்

2. என் சக்தியும் புத்தியும் நீங்கதான்
என் ஓட்டமும் நாட்டமும் நீங்கதான்
என் எதிர்காலமும் நீங்கதான்
நீங்கதானாப்பா
\- என் சொந்தம்

3. என் பட்டமும் பதவியும் நீங்கதான்
என் கையின் பிரயாசம் நீங்கதான்
என் வைப்பு நிதியும் நீங்கதான்
நீங்கதானப்பா
\- என் சொந்தம்

4. என் முன்னேயும் பின்னேயும் நீங்கதான்
என் வலப்புறம் இடப்புறம் நீங்கதான்
என்னை சுற்றிலும் முற்றிலும் நீங்கதான்
நீங்கதானப்பா
\- என் சொந்தம்